அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 365

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
10 ஏப்ரல், 1987.

சகல அமைச்சுச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

தாபன விதிக்கோவை 1/11 ஆம் அத்தியாயத்தின்
4ஆம் பிரிவு.

தாபன விதிக்கோவையின் 1/11ஆம் அத்தியாயத்தின் உபபிரிவு 4:4 ஐ நீக்கி பின்வருவதைப் பதிலீடு செய்க.

4:4 மீளமைப்பின் பின்னர், உத்தியோகத்தர் ஒருவர் பெற்ற கடைசி வேதனம் புதிய வேதன அளவுத் திட்டத்தின் வேதனப்படி ஒன்றுடன் ஒத்து இயல்வதாயின், அவ்வுத்தியோகத்தர், அதற்கு அடுத்த (மேலான) வேதனப் படியில் அமர்த்தப்படல் வேண்டும்.

02. இத்திருத்தம் 1986.01.01 முதல் செயல்வலு உடையதாகும்.

ஒப்பம்: டி. பி. ஐ. ப். எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.